Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX : 94-11-269-8629
E-mail : cultujpn@sltnet.lk

March 6, 2013

# PRESS RELEASE

**ஜப்பான் வட மாகாணத்தின் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சமூக கீழ்க்கட்டமைப்பு புணர்நிர்மாணத்திற்கும் வசதிகளுக்கும் உதவுகிறது.**

ஜப்பானிய அரசாங்கம் "வட மாகாணத்தின் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சமூக கீழ்க்கட்டமைப்பு புணர்நிர்மானம் மற்றும் வசதிகளை ஏற்படுத்தும் செயற்திட்டத்திற்கு" 345 மில்லியன் யப்பானிய யென் நிதிப்பங்களிப்பை (அண்ணளவாக 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) UN Habitat நிறுவனத்தினூடாக வழங்குகிறது. இது தொடர்பான ஒப்பந்தம் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திரு. ஜானக சுகததாச, வடமாகாணத்தின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்கான ஜனாதிபதி செயலணிப்பிரவின் செயலாளர் திரு. S.B. திவாரத்ன ஆகியோர் முன்னிலையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு நிறுவனத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய அலுவலகத்தின் சிரேஸ்ட மனித குடியிருப்பு அலுவலர் திரு. யொசினொபு புகுசாவா ஆகியோருக்கிடையே ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் மார்ச் 6 2013 அன்று கைச்சாத்திடப்பட்டது.

இச்செயற்த்திட்டத்தின் பிரதான உள்ளடக்கங்களாவன (1) பழுதான அல்லது சிதைவடைந்த உள்ளக வீதி மீள்கட்டமைப்பு, நீர் வழங்கல் வசதிகள், பல்நோக்கு சமூக நிலையங்கள், மழை நீர் சேமிக்கும் வசதி போன்ற சிறிய சமூக கீழ்க்கட்டமைப்பு புணர்நிர்மாணம் மற்றும் புணரமைப்பு ; (2) ஆரம்பக் கல்வி முன்னேற்றம்; (3) பெண்களை தலைமைத்துவம் மற்றும் தீர்மாணம் எடுத்தலில் வளப்படுத்தல்; (4) சிறந்த சேவை வழஙகுதலுக்கு சமூக அரசாங்க பங்காளிகளின் திறனை விருத்தி செய்தல்; (5) சமூகங்களிடையே சூழலை மேம்படுத்தல், காலநிலை மற்றும் அணர்த்த மீளும் தன்மையை மேம்படுத்தல். இந்த முன்முயற்சிகளின் மூலம் வட மாகாணத்தின் கிளினொச்சி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மிகவும் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களைச் சேர்ந்த 98,120 மீள் திரும்பியோர் பயனடைவர். இச்செயற்த்திட்டமானது UN Habitat நிறுவனத்தால் சமூக மட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் அடுத்த இரண்டாண்டு காலப்பகுதியில் அமுல்படுத்தப்படும்.

"UN Habitat நிறுவனத்தின். "மக்கள் செய்முறை" மாதிரியானது ஜப்பானிய அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படும் "மனித பாதுகாப்பு" எண்ணக்கருவிற்கு ஒத்திசைவாக இருக்கிறது. இவ்வனுகுமுறை மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வரவும் வட மாகாணத்தின் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்குமான சூழலை சந்தேகமின்றி ஏற்படுத்தும்," என்று ஜப்பானிய தூதுவர் கௌரவ. திரு. நொபுஹிதொ ஹொபொ கூறினார்.

ஜப்பானிய அரசாங்கமானது முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீளெழுச்சிக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் தனது துரிதமான உதவிகளை இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுனங்களின் கூட்டுறவுடன் தொடர்ந்து வழங்கும்.

************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information.
Tel: 011-269-3831~3 (ext.227)